செ.வெ.எண்: 79 27.11.2016

**தமிழகஅரசின் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் பாலமாக செய்தி-மக்கள் தொடர்புத்துறை செயல்படுகிறது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச்செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், தேசிய நலவாழ்வு மைய திட்ட இயக்குநர் டாக்டர்.தாரேஸ்அகமது,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 26.11.2016 அன்று துவக்கி வைத்தார்.

இந்த புகைப்படக்கண்காட்சியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு செயல்படுத்திய திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் இந்த புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இந்த புகைப்பட கண்காட்சியில் தமிழகஅரசு பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தும் திட்டங்களான தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், விவசாயக்கடன் தள்ளுபடி, 100 யூனிட் இலவச மின்சாரம், மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த புகைப்படங்களும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இடம்பெற்றுள்ளது. எனவே, இந்த புகைப்பட கண்காட்சி மூலம் பொதுமக்கள் தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களையும் அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இயக்குநர்கள் மரு.கே.செங்குட்டுவன் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), மரு.நாராயணபாபு (மருத்துவக்கல்வி இயக்ககம்), மரு.க.குழந்தைசாமி (பொது சுகாதாரம்), மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பரிமளாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இணை இயக்குநர் மரு.சம்ஷாத்பேகம் (பொது சுகாதாரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலை சங்கத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.க.பிரபாகரன் (செய்தி), திரு.ரா.ராமசுப்பிரமணியன் (விளம்பரம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**